கேட்டுக்கொள்ளப்பட்டது. இவர்கள் இத்திருக்கோயிலின் சுற்றுப்பிரகாரத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு இழுவை இரயில் அமைக்க சாத்தியக்கூறு இல்லை என்று தீர்மானித்துவிட்டார்கள். வேகமாக வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் உதவியால் எப்படியும் இழுவை இரயில் அமைத்திட முடியும் என்று இந்த அரசு கருதினாலும் 1985-ஆம் ஆண்டு நிலைமைபடி இதனை அமைக்க ரூ. 70 இலட்சம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டதாலும் இத்திருக்கோவில் நிதிநிலை தற்போது இழுவை இரயில் அமைப்பதற்குப் போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் தற்சமயம் இம்முயற்சிகள் மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

135--

பெரம்பூர் ஊராட்சியில் ஆரம்பப் பள்ளிக்கூடம் திறத்தல்

*33828--**திரு. சி. சுவாமிநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், பெரம்பூர் ஊராட்சி புதுப்பட்டில் போதிய மாணவர்கள் இருப்பதால் அங்கு புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடம் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

137--

கீழப்பாவூர் ஒன்றியத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

*20697--**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--